# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 06.05.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் ஆயத்துல் குர்ஸியை ஓதினார்கள்:**

சில நாட்களுக்கு முன்னர் நான் எனது குத்பாவில் பொதுவாக முஸ்லிம்கள் தங்களது கவனத்தை நன்மைகளின் பக்கம் வைத்து இறைவனுடன் வைத்துள்ள தொடர்பில் முன்னேறுவதற்குப் பகரமாக பீர்கள், ஃபக்கீர்மார்களின் பக்கம் செல்வது அவர்களிடத்தில் தங்களது தேவைகளை வேண்டுவது அல்லது கடந்த கால சான்றோர்கள், அவ்லியாக்கள் ஆகியோரின் கபர்களுக்குச் சென்று இறைவனிடம் வேண்டுவது போன்று அவர்களிடம் வேண்டுகின்றனர் என்று கூறியிருந்தேன். பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் இருக்கின்ற பெரும்பாலானவர்கள் குறைந்த கல்வியறிவு உடையவர்களாக இருப்பதன் காரணமாகவும் தலைமுறை தலைமுறையாக ஃபீரை வணங்குகின்ற எண்ணம் அவர்களிடம் இருந்து வருவதாலும் இந்த பெரியவரால் அல்லது அவ்லியாவால் நமது கோரிக்கைகளை நிறைவேற்ற முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர். அவர்களால் நமது தேவைகளை நிறைவேற்ற முடியும் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

சிலர் இணை வைப்பதில் எந்த அளவு முன்னேறி விட்டனர் என்றால் அந்தக் கபர்களுக்கு முன்னால் அவர்கள் ஸஜ்தா செய்கின்றனர். இந்த மகனை இறைவன் நமக்கு தரவில்லை. மாறாக தாதா சாஹிப் தான் தந்தார் என்று பெண்கள் கூறிய சம்பவத்தையும் நாம் கேள்விப்படுகிறோம். இந்த அளவுக்கு ஷிர்க் வளர்ந்து விட்டது. இப்படிப்பட்ட சமயத்தில் எல்லாரையும் விட சிறந்த ஏகத்துவவாதிகளாகத் தங்களை பறைசாற்ற வேண்டிய முஸ்லிம்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட போதனையே ஏகத்துவமாக இருந்தும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த ஏகத்துவம் பற்றி வலியுறுத்திக் கூறியிருந்தும் திருக்குர்ஆனும் இது தொடர்பான போதனைகளை தந்திருந்தும் துர்பாக்கிய நிலை என்னவென்றால் முஸ்லிம்கள் என்று தங்களை கூறிக்கொள்பவர்கள் ஷிர்க்கில் மூழ்கிவிட்டார்கள். இவர்கள் எப்படிப்பட்ட ஷிர்க்கில் இருக்கின்றனர் என்றால் அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் நெருங்குவதற்குப் பதிலாக ஷிர்க் அவர்களை இணை வைப்பவர்களின் அருகில் கொண்டு சென்று விட்டது.

அல்லாஹ் இந்தக் காலத்தில் நம்மீது அருள் செய்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அனுப்பினான். இந்த ஃபீர், பக்கீர்மார்களால் சீர்குலைந்து போன போதனைகளின் தவறுகளை அகற்றி அவர்களுக்கு சரியான வழிகாட்டுதலை வழங்குவதற்காக அல்லாஹ் தனது இந்த தூதரை, காலத்தின் மஹ்தியை மஸீஹை நெறிநீதித் தீர்ப்பவராக அனுப்பி வைத்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் மூலமாக நமக்கு வழிகாட்டியுள்ளான். ஷிர்க்கின் அழுக்கிலிருந்து நம்மை வெளியேற்றுவதற்கு அவர்கள் தமது போதனைகள் மூலம் வழிகாட்டினார்கள். அந்த போதனைகள் திருக்குர்ஆனின் போதனைகளுக்க ஏற்பவே இருந்தது. அதன் மூலமாக இறைவனின் ஏகத்துவம் நிலைபெற்று விடும். அதன் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான போதனைகள் நமக்குத் தெரிய வருகிறது. அவர்களது சிறப்பான உயர் தகுதி பற்றியும் நமக்குத் தெரிய வருகிறது. அந்த போதனைகளின் மூலமாக எல்லா மதங்களின் மீதும் இஸ்லாம் மிகைத்து நிற்கும் சிறப்பான நிலையும் நிரூபிக்கப்படுகிறது. மற்ற மதங்களைச் சார்ந்தவர்கள் எங்கள் மதத்தின் மூலமாகத்தான் இரட்சிப்பு கிடைக்கும் என்று எவ்வளவுதான் கூறினாலும் கூறிக்கொள்ளட்டும். குறிப்பாக கிறித்தவர்கள சிலுவை மரணம் மூலமாக இயேசு நமது பாவங்களுக்கு பரிகாரமாக ஆகிவிட்டார் என்று கூறுகின்றார்கள். எனவே இயேசுதான் நமது இரட்சிப்பிற்கான வழியாக இருக்கின்றார். அவர் இறைவனின் மகனாக இருப்பதால் அவரை ஏற்றுக் கொள்பவர்கள் எல்லா பாவங்களிலிருந்தும் தூய்மையடைந்து விடுவார்கள் என்றும் அவர்கள்

கூறுகின்றார்கள். இன்னும் சொல்லப்போனால் கிறித்தவர்களில் செயின்ட்ஸ் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்கள் தாங்களும் இறைவனிடம் மக்களுக்காக பரிந்துரை செய்வதற்காக ஒரு வழியாக இருப்பதாக கூறுகின்றார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்னர் முன்னால் போப் அதாவது இரண்டாவது ஜான் பவுல் அவர்கள் தொடர்பாகவும் கிறித்தவ உலகில் அவரது சில அற்புதங்கள் தொடர்பாக கூறப்பட்டது. அவர் காட்டிய சில அற்புதங்கள் மூலம் அவருக்கும் மக்களுக்காக இறைவனிடம் பரிந்துரை செய்யும் தகுதி இருப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. இதனால் அவருக்கு ஒரு சிறப்பான இடம் கிடைத்து விட்டது. பரிந்துரை செய்யும் அளவுக்கு இறை நெருக்கம் கிடைத்து விட்டது. சொர்க்கத்தில் அமர்ந்தவாறு அவரால் இத்தகைய பணியைச் செய்ய முடியும் என்றெல்லாம் அவர்கள் கூறியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும், இது அவர்களின் கருத்துக்களாகும். அவர்களது தவறான போதனைகளுக்கேற்ப அவர்கள் இதை கூறுகின்றனர். உண்மையில், அவர்கள் கூறும் இப்போதனைகள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் போதனைகளுக்கு முற்றிலும் எதிரானதாக இருக்கின்றது. அவை ஷிர்க்கின் அடித்தளமாக அமைந்து விட்டன. கிறித்தவர்களின் போதனைகளிலுள்ள இந்த தவறான கருத்துக்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தான் எடுத்துக் கூறினார்கள். இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை உங்கள் முன்பு வைக்கின்றேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தன்னை இறைவன் என்று கூறினார்கள் என்பது அவர்கள் மீது சுமத்தப்படும் ஒரு பழித்துரை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் ஒருபோதும் அப்படிப்பட்ட வாதத்தைச் செய்யவில்லை. அவர்கள் தன்னைப் பற்றி எதையெல்லாம் கூறியுள்ளார்களோ அந்த சொற்களைப் பார்க்கும் போது அவை ஸபாஅத் – அதாவது மக்களுக்காக இறைவனிடம் பரிந்துரை செய்வது என்ற எல்லையை தாண்டவில்லை என்பது தெரிகிறது. நபிமார்கள் பரிந்துரை செய்பவர்களாக இருக்கின்றார்கள் என்பதை யார் தான் மறுக்கின்றார்? ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் பரிந்துரையில் விளைவாக இஸ்ரவேல் சந்ததிகள் கொழுந்து விட்டு எரிந்த தண்டனையிலிருந்தும் இரட்சிப்பைப் பெற்றார்கள். இந்த விஷயத்தில் நானே அனுபவமுள்ளவனாக இருக்கின்றேன். எனது ஜமாஅத்திலுள்ள பெரும்பாலான கண்ணியமிக்க நபர்களுக்கு இந்த விஷயம் நன்றாகத் தெரியும். சில துன்பங்களிலும் நோய்களிலும் இருந்தவர்கள் எனது பரிந்துரையின் காரணமாக தங்களது துக்கங்களிலிருந்து விடுதலை அடைந்தார்கள். இது பற்றிய செய்தி அவர்களுக்கு முதலிலேயே தரப்பட்டிருக்கின்றது. தனது சமுதாயம் பாவங்களிலிருந்து இரட்சிப்பைப் பெற வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் அறையப்பட்டு சமுதாயத்தின் பாவங்கள் அவர் மீது போடப்பட்டது என்பது எத்தகைய தவறான கொள்கையாக இருக்கின்றது என்றால் அது அறிவை விட்டும் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் வெகுதூரம் சென்று விட்டது. பாவம் ஒருவர் செய்ய தண்டனை இன்னொருவருக்கு வழங்கப்படும் என்ற கொள்கை இறைவனின் நீதியின் பண்புகளுக்கு நேர் எதிரானதாக இருக்கின்றது. சுருக்கமாக சொல்வதென்றால், இந்தக் கொள்கை தவறுகளின் ஒரு தொகுப்பாக விளங்குகின்றது.

**பிரிதோரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பரிந்துரை செய்பவராக இருப்பவருக்கு முதலில் இறைவனுடன் தொடர்பு இருக்க வேண்டும். அது முழுமையாக இருக்க வேண்டும் என்பது உண்மையான விஷயமாகும். அதன் மூலமாக அவர் இறைவனிடமிருந்து அருளைப் பெற வேண்டும். பிறகு இறைவனது படைப்பினங்களுடனும் அவருக்கு உறுதியான தொடர்பு இருக்கும். அதன் மூலமாக இறைவனிடமிருந்து அவர் பெறுகின்ற நன்மைகளையும் அருள்களையும் அவர் படைப்பினங்களுக்கு வழங்குவார். இந்த இரண்டு விதமான தொடர்புகளும் வலுவாக இல்லாதவர் இந்த விஷயம் தொடர்பான பரிந்துரை செய்பவராக ஆக முடியாது. இந்த விஷயம் தொடர்பான சிந்திக்கத்தக்க மூன்றாவது கருத்து என்னவென்றால் நான் ஏற்கனவே குறிப்பிட்ட அந்த இரண்டு

முன்மாதிரிகளையும் ஒருவரிடம் நாம் பார்க்காத வரையில் அவரிடமிருந்து பயன்தரத்தக்க எந்த நல்விளைவும் ஏற்பட முடியாது. மற்ற அனைத்து வாதங்களும் வெறும் கற்பனைகளாகவே இருக்கும்.

அதாவது இறைவனுடன் உள்ள தொடர்பு, படைப்பினங்களுடனுள்ள தொடர்பு, அல்லாஹ்வுடன் தொடர்பு கொண்டதால் கிடைத்த அருள்களை அவனது படைப்பினங்களுக்கு வழங்குவது ஆகியவை நல்விளைவுகளாகத் தென்பட வேண்டும். இவை இல்லையென்றால் அவை கற்பனையான வாதங்களாகத்தான் இருக்கும் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் முன்மாதிரியைப் பாருங்கள். அவரால் சில சீடர்களைக் கூட சீர்திருத்த முடியவில்லை. அவர்களைப் பற்றி எப்போதும் அவர்கள் சோம்பேறிகளாக இருக்கின்றார்கள் என்றே அவர்கள் கூறி வந்தார்கள். அவர்களில் சிலரை ஷய்த்தான் என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள். பைபிள் அடிப்படையில் பார்க்கும் போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது எந்த முழுமையான முன்மாதிரியையும் நாம் நிரூபித்துக் காட்ட முடியாது. இதற்கெதிரில் நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் முழுமையான முன்மாதிரியாகத் திகழ்கின்றார்கள். பௌதீகமான முறையிலும் ஆன்மீகமான முறையிலும் எவ்வாறெல்லாம் அவர்கள் மக்களை வேதனை தரக்கூடிய தண்டனையிலிருந்தும் விடுவித்தார்கள்? பாவங்கள் நிறைந்த வாழ்க்கையிலிருந்து அந்த மக்களை எப்படி வெளியேற்றினார்கள் என்பதைப் பார்க்கும் போது உண்மையில் அவர்கள் ஒரு உலகையே மாற்றி விட்டார்கள்.

அவ்வாறே ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் பரிந்துரையின் மூலமாகவும் பயன் கிடைத்தது. கிறித்தவர்கள் இயேசுவை மூஸாவை போன்றவர் என்று கூறுகின்றார்கள். ஆனால் அதை அவர்களால் நிரூபிக்க முடியாது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் போன்று தனது சமுதாயத்தை அவர்கள் பாவங்களிலிருந்து காப்பாற்றியதாக அவர்களால் நிரூபிக்க முடியாது.

பழைய ஏற்பாட்டில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தொடர்பான நல்லுதாரணங்கள் இருப்பதை நாம் பார்க்கின்றோம். ஆனால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பான எந்த நல்லுதாரணமும் அதில் இல்லை. அவ்வாறு கூறியிருந்தாலும் அதை பவுல்தான் கூறியுள்ளார். அல்லது அறிமுகமில்லாத சிலரது பெயர்களைக் கூறி அவர்கள் அதைக் கூறியிருப்பதாக சில கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மறைவிற்குப் பிறகு அவர்களது சமுதாயத்தின் நிலைமை மிகவும் சீர்குலைந்து விட்டது. இப்போதும் எவருக்காவது சந்தேகம் இருந்தால் அவர் இலண்டனுக்கு சென்று அல்லது ஐரோப்பாவிலுள்ள மற்ற நகரங்களுக்கு சென்று பார்க்கட்டும். அப்போது ஈஸா (அலை) அவர்கள் தமது சமுதாயத்தை பாவங்களிலிருந்து விடுவித்துள்ளாரா? அல்லது பாவங்களில் சிக்க வைத்துள்ளாரா? என்பது தெரிந்து விடும்.

பாவம் அல்லது தீமை என்பதன் விளக்கத்தையே மாற்றி விட்டால், தீமைகள் சுதந்திரம் என்ற பெயரில் நன்மைகளாக கருதப்படுமானால் இவர்களது போதனைகளுக்கேற்ப இவர்களது செயல்களும் சரியானவைதான் என்று கருதலாம். ஆனால், உண்மையிலேயே தீமைகளாக இருப்பவை அல்லது ஒழுக்கத்தை முற்றிலும் கைவிட்டு விட்டு செய்யப்படும் செயல்கள், ஒழுக்கரீதியாகப் பார்க்கும் போது மனிதனை மனிதத் தன்மையிலிருந்தும் வெளியேற்றுகின்ற செயல்கள் ஆகியவற்றால் ஏற்படும் தீமைகள் ஐரோப்பாவில் அதிகமாக இருக்கின்றன என்பதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். மேலும் இவை பாவங்களிலிருந்தும் மனிதனை வெளியில் கொண்டு வருபவையாக இல்லாமல் பாவங்களில் மனிதனை மூழ்கக் கூடியவையாக இருக்கின்றது என்று கூறுகின்றார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவை வெறும் வாதங்களாக மட்டுமே இருக்கின்றது. அதற்கான ஆதாரங்கள் அவர்களிடம் இல்லை. கிறித்தவர்கள் இயேசு பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்க வந்துள்ளார் என்று கூறுவது வெறும் கற்பனையான விஷயமாகும். அதற்கு மாற்றமாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மறைவுக்குப் பிறகு அவரது சமுதாயத்தின் நிலை மிகவும் சீர்குலைந்து விட்டதை நாம் பார்க்கின்றோம். ஆன்மீகத்திலிருந்தும் அது முற்றிலும் விலகிச் சென்று விட்டது.

சர்ச்சை சார்ந்திருப்பவர்கள் ஆன்மீகத்திலிருந்தும் விலகி நாம் வெகு தூரம் சென்று விட்டோம் என்று அவர்களே இப்போது கூறுகின்றார்கள்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

உண்மையான முழுமையான பரிந்துரை செய்பவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே ஆவார்கள். அவர்கள் சமுதாயத்தை சிலை வணக்கத்திலிருந்தும் எல்லா விதமான அழுக்குகளிலிருந்தும் அசுத்தங்களிலிருந்தும் வெளியேற்றி அவர்களை மிக உயர் தகுதியுள்ள சமுதாயமாக மாற்றினார்கள். அதற்கான ஆதாரம் என்னவென்றால் அவர்களின் உண்மையையும் தூய்மையையும் நிரூபிப்பதற்காக ஒவ்வொரு காலகட்டத்திலும் அல்லாஹ் அதற்கு முன்மாதிரியாகத் திகழ்கின்ற ஒருவரை அனுப்புகின்றான்.

இதுவே கிறித்தவம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்குக் காட்டியுள்ள அசல் படமாகும்.

யூதர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது சுமத்த விரும்பிய எல்லா அவதூறுகளிலிருந்தும் அல்லாஹ் அவர்களை பாதுகாத்தான். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் நீண்ட நாட்களாக வாழ்ந்து தனது வருகையின் நோக்கத்தில் வெற்றி பெற்றார்கள். போப் தொடர்பாக நான் சில விஷயங்களை நான் கூறக் காரணம் என்னவெனில் சிறுவர்களும், இளைஞர்களும் தங்களது பள்ளிக்கூடங்களில் இன்றைய நாட்களில் இந்த விஷயங்கள் பற்றி மிக அதிகமாக Discussion நடைபெற்று வருவதை அறிவார்கள். போப் நிகழ்த்திய அற்புதங்கள் தொடர்பாக கருத்துக்கள் கூறப்படுகின்றன. இதனால் சில நேரங்களில் தீய தாக்கமும் ஏற்பட்டு விடலாம். எனவே அவர்களுக்கு உண்மையான நிலை பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர் தகுதியானது எப்படிப்பட்டதென்றால் அதுதான் உண்மையில் ஸபாஅத் அதாவது பரிந்துரையின் அசல் தகுதியாக இருக்கின்றது. அது மிக உயர்ந்த தகுதியாகும். அவர்களது வாழ்க்கையிலும் அவர்களது மரணத்திற்குப் பிறகும் இன்று வரை இந்த அற்புதங்கள் நடந்து கொண்டேயிருக்கின்றது. உயர்வான முன்மாதிரிகள் நிலைநாட்டப்பட்டு வருகின்றன. அவர்களை ஏற்றுக் கொண்டவர்களில் அற்புதங்களை காட்டுபவர்கள் பிறந்து கொண்டிருக்கின்றார்கள். அஹ்மதிகளாகிய நாம் மிக உறுதியுடன் இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்கின்றோம். அல்லாஹ் தனது வல்லமையை வெளிப்படுத்தும் காட்சிகளை இன்றும் காட்டிக் கொண்டே இருக்கின்றான். இவை யாவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றிச் சென்றதன் விளைவாகவே நமக்கு கிடைத்துள்ளன. எந்தவொரு செயிண்ட் அல்லது பெரியவரின் சிபாரிசும் நமக்கு தேவையில்லை என்ற உறுதியில் நாம் நிலைத்திருக்கின்றோம். திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப செயல்பட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலமே இறைவன் கிடைப்பான்.

ஒருவரது மரணம் மூலமாகத்தான் கிறித்தவர்கள் இரட்சிப்பைப் பெற முடியும் என்று கூறுகின்றார்கள். அந்த இரட்சிப்பையும் இறைவன் அவர்களுக்கு வழங்கவில்லை. மக்கள்தான் இதை அவர்களுக்கு வழங்குவதாக கூறுகின்றார்கள். அதுவும் கூட இவர்கள் காட்டுகின்ற இந்த அற்புதங்கள் உண்மையில் அற்புதங்களாக இருக்கின்றனவா? அதன் உண்மை நிலை என்ன? என்பது கூட மக்களுக்கு தெரியாது. மாறாக, போலந்து நாட்டின் ஒரு பத்திரிகை இவ்வாறு எழுதியிருக்கின்றது. இவர்கள் காட்டிய அற்புதங்களை

அது ஆட்சேபனை செய்திருக்கின்றது. ஒருவேளை மருத்துவர்களின் குழுதான் சில அற்புதங்களை தீர்மானிக்கின்றதோ என்ற ஐயம் எழுகின்றது. அவர்கள் அந்த நோய்களை சரியாக அடையாளம் கண்டனரா? இல்லையா? எந்தப் பெண் தொடர்பாக அவருக்கு Parkinson (கூண் விழுதல்) இருப்பதாக கூறப்பட்டதோ அவருக்கு ஒருவேளை அந்த நோய்க்கு ஒப்பாக இருக்கின்ற வேறு நோய் இருந்திருக்கலாம். அப்படிப்பட்ட நோய்கள் சிறிது காலத்திற்குப் பிறகு தாமாகவே சரியாக விடுகின்றன.

இப்போது நான் ஷபாஅத் – பரிந்துரை தொடர்பான சரியான இஸ்லாமிய கருத்து என்ன என்பதை கூற விரும்புகின்றேன். ஒரு முஸ்லிமின் பார்வையில் ஷபாஅத் என்றால் என்ன? அது எப்படி இருக்க வேண்டும்? என்பது பற்றி திருக்குர்ஆனில் பல வசனங்கள் உள்ளன. அந்த பல்வேறு வசனங்களின் ஒளியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல இடங்களில் இந்த விஷயங்களை விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்கள். ஷபாஅத்தின் உண்மை நிலை என்ன? என்பதைப் பற்றி அவர்கள் விளக்கமாகக் கூறியுள்ளார்கள்.

நான் தற்போது ஓதிய வசனம் ஆயத்துல் குர்ஸியாகும். பலருக்கும் இந்த வசனங்களின் பொருள் தெரிந்திருக்கும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

*அல்லாஹ். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவரும் இலர். அவன் என்றென்றும் உயிருடன் நிலைத்திருக்கச் செய்பவன். தானாகவே நிலைத்திருப்பவன். மற்றெல்லாவற்றையும் நிலைத்திருக்கச் செய்பவன். சிற்றுரக்கமும், உறக்கமும் அவனைப் பற்றுவதில்லை. வானங்களிலும், பூமியிலும் உள்ளவை அனைத்தும் அவனுக்கே உரியன. அவனது அனுமதியின்றி அவனிடத்தில் பரிந்துரை செய்பவர் எவர்? அவர்களுககு முன்னால் இருப்பவற்றையும் அவர்களுக்குப் பின்னால் இருப்பவற்றையும் அவன் அறிகின்றான். அவன் எந்த அளவு விரும்புகின்றானோ அதை தவிர அவனுடைய ஞானத்திலிருந்து எதனையும் அவர்களால் பெற முடியாது. அவனுடைய ஆட்சி வானங்களிலும் பூமியிலும் பரவியிருக்கின்றது. இந்த இரண்டையும் பாதுகாப்பது அவனை சோர்வுக்குள்ளாக்குவதில்லை. அவன் உயர் தகுதியுடையோனும், மகத்துவமிக்கோனுமாவான். (2:256)*

இந்த வசனம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது எல்லா வசனங்களின் தலைவனாகும் என்று கூறியுள்ளார்கள். இதில் அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றி அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. சூரா பக்கராவின் முதல் நான்கு வசனங்கள், ஆயத்துல் குர்ஸி மற்றும் அதனோடு வருகின்ற அடுத்த இரு வசனங்கள், சூரா பக்கராவின் கடைசி மூன்று வசனங்கள் ஆகியவற்றை ஓதுபவரின் வீட்டிலிருந்து ஷய்த்தான் ஓடி விடுகின்றான் என்று ஒரு நபிமொழி அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. அதாவது இந்த வசனங்களைப் படித்து விட்டு அதைப் பற்றி சிந்தித்து அதிலுள்ள கருத்துக்களைப் புரிந்து அதற்கேற்ப செயல்பட மனிதன் முயற்சி செய்தால், ஷய்த்தான் தானாகவே அவரை விட்டும் விலகிச் சென்று விடுவான்.

இந்த வசனங்களில் அல்லாஹ் அருள்களை வைத்துள்ளான். இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப செயல்பட்டு அல்லாஹ்வின் பண்புகளை மனிதன் அறிந்து கொண்டால், பிறகு உள்ளத்தை எப்போதும் தூய்மையாக வைத்திருக்க முயற்சி செய்தால் அத்தகு செயல்களால் அல்லாஹ்வின் அருள்கள் அவருக்கு கிடைக்கும். அப்படிப்பட்டவர்கள் தொடர்பாக அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிந்துரை கிடைக்கும் என்பது ஹதீஸ்களிலிருந்து நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக மனித பலவீனங்களை அல்லாஹ் கண்டும் காணாமல் விட்டு விடுகின்றான். ஆனால் எந்த நற்செயலையும் செய்யாமலும் அல்லாஹ்வின் மீது நிச்சய உறுதி இல்லாமலும் தொழுகையின் பக்கம் கவனம் இல்லாமலும் இறைவனின் கட்டளைகளை ஏற்றுச் செயல்படுவதில் விருப்பமின்மையும் இருந்தால் பிறகு பீர்கள்,

ஃபகீர்மார்கள் அல்லது அவ்லியாக்களின் கபர்களில் துஆ செய்வதை மட்டும் சார்ந்திருப்பதன் மூலம் பாவமன்னிப்பு, பரிந்துரை ஆகியவை கிடைக்க முடியாது. பீர், ஃபக்கீர் ஆகியோரை மட்டும் நம்பியிருப்பது கூட ஒரு வகை ஷிர்க் ஆகும். கிறித்தவர்களிடம் வெளிப்படையான ஷிர்க் தென்படுகின்றதென்றால் முஸ்லிம்களிடம் வெளிப்படையான, மறைமுகமான இருவிதமான ஷிர்க் இருப்பதை பார்க்க முடிகின்றது. இந்த வசனத்திலுள்ள தூதுச் செய்தியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ள விளக்கத்தின் ஒளியில் நான் கூறுகின்றேன்.

**அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹு லாயிலாஹ இல்லாஹுவல் ஹய்யுல் கய்யூம் – முழுமை பெற்ற நற்பண்புகளின் தொகுப்பாகவும் ஒவ்வொரு குறையிலிருந்தும் தூயவனாகவும் இருப்பவனே அல்லாஹ். அவனே வணக்கத்திற்குத் தகுதியுடையவனாக இருக்கின்றான். அவனது இருப்பே அவனது தெளிவான ஆதாரமாகும். ஏனென்றால், அவன் என்றென்றும் உயிருடனிருப்பவன். தாமாகவே நிலைத்திருப்பவன். அவன் எப்போதும் உயிருடன் இருப்பவன். அவனைத் தவிர வேறு எந்த பொருளிலும் அவை என்றென்றும் உயிருடன் இருக்கின்ற அல்லது தாமாகவே நிலைத்திருக்கின்ற பண்புகள் இருக்க முடியாது.

அதாவது உலகில் நாம் பார்க்கக்கூடிய எந்தவொரு பொருளும் தாமாகவே நிலைத்திருப்பதில்லை. இறைவன் மட்டுமே அவ்வாறு நிலைத்திருக்கின்றான். அவன் எப்போதும் இருந்து வருகின்றான்; எப்போதும் இருப்பான். மற்றவை அனைத்துமே அவனது படைப்புகளாகும். அவற்றிற்கு எப்போதாவது உயிர் கிடைத்திருக்கலாம் அல்லது எந்த சமயத்திலும் அவை தோன்றியிருக்கலாம். பிறகு அவை அழிந்தும் விடுகின்றன. அவற்றால் எப்போதும் நிலைத்திருக்க முடியாது. அவற்றின் வாழ்நாளே குறைவாக இருந்து அவற்றால் தாமாகவே நிலைத்திருக்கவும் முடியாமல் இருக்கும்போது அவற்றால் எந்த துஆக்களைக் கேட்க முடியும்? எந்த துஆவை அதனால் ஏற்றுக் கொள்ள முடியும்? அதனால் யாருக்கு பிள்ளைகளைக் கொடுக்க முடியும்? எனவே, எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருப்பவன் அல்லாஹ் மட்டுமேயாவான். அவன் எப்போதும் இருந்து வருகின்றான். எப்போதும் இருப்பான்.

அல்லாஹ் மட்டுமே உமது வணக்கத்திற்குரியவன். அவனைத் தவிர வணக்கத்ற்குரிவன் வேறு எவனும் இல்லை என்பதை இந்த வசனத்தின் ஆரம்பத்தில் அல்லாஹ் கூறுகின்றான். எனவே, வெளிப்படையான, மறைமுகமான ஒவ்வொரு ஷிர்க்கிலிருந்தும் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அப்போதுதான் அவனது பண்புகளிலிருந்து அருள்களைப் பெற முடியும் என அல்லாஹ் கூறுகின்றான்.

பிறகு உறக்கம் வராமலிருப்பது அல்லாஹ்விற்கு மட்டுமே உரிய பண்பாகும். சிற்றுறக்கமும் அவனுக்கு வராது. எல்லா சமயத்திலும் தனது படைப்பினங்கள் மீது அவனது பார்வை இருக்கின்றது. எல்லா அமைப்பையும் அவனே செயல்பட வைக்கிறான். அந்த அமைப்பை செயல்படுத்துவதால் அவன் சோர்வடைவதில்லை. நமது பீர்கள், ஃபக்கீர்கள் சோர்விற்கள்ளாகின்றார்கள். தொழுகை இறைவணக்கங்கள் ஆகியவற்றின் பக்கம் அவர்களுக்கு கவனம் இருப்பதில்லை. சாப்பிடுவது, குடிப்பது, இன்பங்களில் மூழ்கியிருப்பது, தூங்குவது ஆகியவை மட்டுமே இவர்களது பணியாக இருக்கின்றது.

பிறகு இந்த வசனத்தில் பரிந்துரை செய்வது பற்றியும் கூறப்பட்டுள்ளது. உண்மையில் ஷபாஅத் – பரிந்துரை இருக்கத்தான் செய்கிறது. பரிந்துரை செய்யப்படுவது உண்மை தான். ஒரு குத்பாவில் நான் இதுபற்றிய கருத்தைக் கூறிய போது எவ்வித பரிந்துரையும் இருக்க முடியாது என்பது போலவே நீங்கள் கூறினீர்கள் என்று ஒருவர் என்னிடம் அதுபற்றி கேட்டார். ஷபாஅத் – பரிந்துரை செய்யப்படுவது உண்மைதான். ஆனால் அதற்குரிய உரிமையை இந்த பீர்களுக்கும், ஃபக்கீர்களுக்கும் அல்லாஹ் வழங்கவில்லை.

**அல்லாஹ் கூறுகின்றான்:** ***பிஇஸ்னிஹி*** – அதாவது அல்லாஹ்வின் அனுமதியுடன் பரிந்துரை செய்யலாம். ஆனால் இதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக எவரால் வாதம் செய்ய முடியும்? இஸ்லாம் முழுமையான இறுதியான மார்க்கம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், அந்த மார்க்கத்தின் போதனைகளுக்கேற்ப முழுமையாக செயல்படுகின்ற ஒவ்வொருவருக்கும் பரிந்துரை செய்வதற்கான அனுமதி அல்லாஹ்விடமிருந்து கிடைத்திருக்கின்றது என்று நம்மால் கூற முடியாது. எவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்காமல் தாமாகவே வெளியே சென்று விட்டார்கள். அஹ்மதிகளில் எவ்வளவு பெரிய இறை நேசராக ஒருவர் இருந்தாலும், அல்லாஹ்வுடன் அவருக்கு உறுதியான தொடர்பு இருந்தாலும் ஷபாஅத் – பரிந்துரை செய்ய தன்னால் முடியும் என்று அவர் வாதம் செய்ய முடியாது. இது தொடர்பாக தமது நிலையை விளக்கியவாறு ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் நவாம் முஹம்மது அலி கான் சாஹிபின் மகன் ஒருமுறை கடுமையாக நோய்வாய்ப்பட்டார். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் துஆவுக்காக வேண்டினார்கள். ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிபின் தியாகங்களைக் கருத்தில் கொண்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவருக்காக துஆ செய்தார்கள். அவர்களது மகனது ஆரோக்கியத்திற்காக துஆ செய்த போது அவரது உடல்நலம் சரியாகாது என்றே அவர்களுக்கு பதில் கிடைத்தது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆ இல்லை என்றால் நான் அவருக்காக பரிந்துரை செய்கின்றேன் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனக்கு அந்த சமயத்தில் கிடைத்த பதில் என்னவென்றால், அல்லாஹ்வின் அனுமதியில்லாமல் பரிந்துரை செய்ய நீர் யார்? என்பதாகும். இதைக் கேட்ட நான் நடுநடுங்கிப் போனேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த நிலையைப் பார்த்த இறைவன் சிறிது நேரம் கழிந்ததும், இன்னக்க அந்தல் மஜாஸ் – உமக்கு இதற்கான அனுமதி வழங்கப்படுகிறது என்று கூறினான். அதற்கு பிறகு அவர்கள் துஆ செய்தார்கள். அதன் விளைவாக நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களது மகனும் உடல்நலம் பெற்று மிக நீண்ட காலம் உயிருடன் இருந்தார்.

இறைவனிடமிருந்து அனுமதி கிடைத்ததால்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் பரிந்துரை செய்வார்கள் என்று ஒரு ஹதீஸில் வந்துள்ளது. இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

பனீ மக்ஸூம் கோத்திரத்தைச் சார்ந்த அடிமையான ஸியாத் பின் அபீ ஸியாத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஊழியராக இருந்த ஒரு பெண்ணிடமிருந்து கேட்டதாக அறிவிக்கின்றார்கள். நபி கரீம் (ஸல்) அவர்கள் தனது ஊழியரான அந்தப் பெண்ணிடம் உனக்கு ஏதாவது தேவை இருக்கிறதா? என அடிக்கடி கேட்டு வந்தார்கள். அறிவிப்பாளர் கூறுகின்றார். ஒரு நாள் அந்தப் பெண் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களே! எனக்கு ஒரு தேவை இருக்கின்றது என்று கூறினாள். என்ன தேவை இருக்கின்றது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அந்த ஊழியப் பெண் கியாமத் நாளன்று தாங்கள் எனக்காக பரிந்துரை செய்ய வேண்டும் என்று வேண்டினார். உமக்கு இந்த விஷயத்தின் பக்கம் எது கவனமூட்டியது? என்று கேட்டார்கள். அதற்கு அந்தப் பெண், எனது இறைவன் தான் எனக்கு கவனமூட்டினான் என்று கூறினாள். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் அதிகமான சஜ்தாக்கள் மூலம் நீ எனக்கு உதவி செய்வாயாக என்று கூறினார்கள். முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பலில் இந்த ஹதீஸ் இடம்பெற்றிருக்கின்றது.

எனவே, பரிந்துரையை விரும்பினால் அதற்காக அதிகமான சஜ்தாக்களின் தேவை இருக்கின்றது. ஒன்றிரண்டு தொழுகைகளை தொழுவதாலோ, பீர்களின் கபர்களில் சஜ்தா செய்வதாலோ பரிந்துரை கிடைக்க முடியாது. மாறாக, அதிகமாக சஜ்தா செய்வதன் மூலமாகத்தான் அது கிடைக்கும். தூய்மையான உள்ளத்துடன்

அல்லாஹ்வின் முன்னிலையில் செய்யப்படும் சஜ்தாக்களாக அவை இருக்க வேண்டும். அல்லாஹ் தனித்தவன். ஏகன். எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானன் என்று கருதியவாறு சஜ்தா செய்ய வேண்டும். எல்லா தேவைகளையும் அவன் நிறைவேற்றுவான் என்று உறுதியாக நம்பியவாறு சஜ்தா செய்ய வேண்டும்.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கியாமத் நாளன்று மக்களிலிருந்தும் நீங்கள் பரிந்துரை செய்கின்ற அந்த நற்பாக்கியம் பெற்றவர்கள் யார்? என்று கேட்கப்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அபூஹுரைராவே! உமக்கு முன்னர் இது பற்றி என்னிடம் யாரும் கேட்கவில்லை என்றே நான் நினைக்கின்றேன். கியாமத் நாளன்று எனது பரிந்துரையைப் பெறுகின்ற நற்பாக்கியம் பெற்றவர்கள் யாரென்றால் அவரில் எவர் தனது உள்ளத்தால் அல்லது மனத்தூய்மையின் விளைவாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை என்று கூறுவாரோ அவரேயாவார் என்று கூறினார்கள். மனத்தூய்மையுடன் அல்லாஹு லாஇலாஹ இல்லாஹு என்று ஒருவர் கூறினால் அதில் அவரது நஃப்ஸின் எந்த கலப்படமும் இல்லாமல் இருந்தால் அதுதான் அசல் விஷயமாகும். அதன் மூலமாகவே அவர் பரிந்துரைக்குத் தகுதியானவராக ஆகின்றார். அப்படிப்பட்ட நன்மக்களுக்குப் பரிந்துரை செய்வதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

திருக்குர்ஆனில் ஓரிடத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக அல்லாஹ் இந்த அறிவிப்பை செய்துள்ளான்.

நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான். உங்களது பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மிக அதிகமாக மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை புரிபவனும் ஆவான்.

இந்த வசனம் யூதர்கள், கிறித்தவர்கள் ஆகியோருக்கு ஒரு திறந்த அறைகூவலாக இருக்கின்றது. நாங்கள்தான் இறைவனுக்குப் பிரியமானவர்கள். நாங்கள்தான் அவனது பிள்ளைகள் என்ற யூதர்களின் வாதமும் நாங்கள் தேவகுமாரனை நம்புவதால் இறைவனுக்குப் பிரியமானவர்களாக இருக்கின்றோம். அவரால் எங்களுக்கு இரட்சிப்பு கிடைத்தது என்ற கிறித்தவர்களின் வாதமும் பொருளற்றது என்று அல்லாஹ் இந்த வசனத்தில் கூறுகின்றான். இப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை பின்பற்றுவதுதான் ஒருவரை அல்லாஹ்வின் நேசத்திற்குரியவராக ஆக்க முடியும். இதில் எல்லா மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு சவால் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முஸ்லிம்களாகிய நமக்கும் இதில் கட்டளை இருக்கின்றது. பெயரளவிலான இஸ்லாம் மட்டும் போதாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்ற வேண்டியது அவசியமானதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே எல்லாரையும் விட அதிகமாக அல்லாஹ்வின் பண்புகளை அறிந்தவர்கள் ஆவார்கள். அதனை தனது வாழ்வின் ஒரு பகுதியாக அவர்கள் ஆக்கிக் கொண்டார்கள். எனவே, அந்த பண்புகளை மேற்கொண்டு நடப்பதற்கு நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுன்னத்திற்கேற்ப செயல்பட வேண்டும். திருக்குர்ஆனின் ஆட்சியை தன் மீது செயல்படும்படி செய்ய வேண்டும். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) இதைத்தான் கூறியுள்ளார்கள். அவர்களது நல்லொழுக்கம் குர்ஆனாகவே உள்ளது. இதுவே அவர்களின் சிறப்புமிக்க மகிமையாகும். அவர்களது ஒவ்வொரு சொல்லும் செயலும் திருக்குர்ஆனுக்கு ஏற்பவே இருந்தது.

**இந்த வசனம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிந்துரை தொடர்பாக பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓரிடத்தில், நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அதன் மூலம் அல்லாஹ் உங்களை நேசிப்பான். உங்களது பாவங்களை மன்னிப்பான். இப்போது பாருங்கள். இந்த வசனம் எவ்வளவு தெளிவாக ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்களது பாதங்களைப் பின்பற்றிச் செல்வதற்காக தேவைப்படுகின்ற அன்னார் மீதுள்ள நேசம், கண்ணியம், அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பது ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் நல்விளைவு யாதெனில் அதன் மூலம் மனிதன் அல்லாஹ்வின் நேசராக ஆகிவிடுகின்றான். அவனது பாவங்கள் அதனால் மன்னிக்கப்படுகின்றது. அதாவது, ஒருவர் பாவம் என்ற விஷத்தை அருந்தியிருந்தால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதுள்ள நேசம், அன்னாருக்கு கட்டுப்பட்டு நடப்பது, அன்னாரைப் பின்பற்றிச் செல்வது என்ற விஷமுறிவிற்கான மருந்தை அருந்துவதன் மூலம் அந்த விஷத்தின் தாக்கம் இல்லாமல் ஆகிவிடும். எவ்வாறு மருந்தின் மூலமாக ஒரு மனிதன் நோயிலிருந்து விடுபட முடியுமோ அவ்வாறே இதன் மூலம் ஒருவர் பாவத்திலிருந்தும் விடுபட்டு தூயவராக ஆகி விடுகின்றார். எவ்வாறு ஒளி இருள்களை அகற்றுகின்றதோ, விஷமுறிவிற்கான மருந்து விஷத்தின் தாக்கத்தை அழிக்கின்றதோ நெருப்பு எரிகின்றதோ அவ்வாறே பெருமானார் (ஸல்) அவர்கள் மீது உண்மையான நேசம் வைத்து அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பது தனது தாக்கத்தை வெளிப்படுத்துகிறது.

ஆக இந்த நேசம், கட்டுப்படுதல் ஆகியவற்றின் மூலம்தான் இந்த சமுதாயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆக்களுக்கு வாரிசாக முடியும்.

இதனை மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பரிந்துரை என்பது இல்லை என ஒருபோதும் கருதக்கூடாது. பரிந்துரை என்பது உண்மையாகும் என்பதே நமது ஈமானாகும்.

*வஸல்லி அலைஹிம் இன்ன ஸலாத்தக்க ஸகனுன் லஹுºம்* – அவர்களுக்காக துஆ செய்வீராக. உம்முடைய பிரார்த்தனை அவர்களின் மன அமைதிக்கு காரணமாகும் என்ற இறைவசனம் இதற்கு சான்றாக இருக்கின்றது. இதில் பரிந்துரையின் தத்துவம் அடங்கியுள்ளது. அதாவது பாவங்கள் செய்வதில் இருக்கும் மனஇச்சைகளின் நெருப்பு குளிர்ந்து விட வேண்டும். பரிந்துரையின் விளைவாக பாவம் நிறைந்த வாழ்க்கைக்கு மரணம் ஏற்பட்டு விடுகின்றது. மன இச்சைகள் மீதும் உணர்வுகள் மீதும் ஒரு குளிர்ந்த தன்மை வந்து விடுகின்றது. அதனால், பாவங்கள் ஏற்படுவது நின்று விடும். அதற்கு எதிரிகள் நன்மைகள் வர ஆரம்பித்து விடும். எனவே, பரிந்துரை என்ற விஷயம் நற்செயல்களை இல்லாமல் ஆக்கவில்லை. மாறாக, அழகிய நற்செயல்களைச் செய்யும்படி அது தூண்டுகிறது. பரிந்துரை மூலமாக நற்செயல்களைச் செய்ய மேலும் ஆவல் ஏற்படுகின்றது. பரிந்துரை பற்றி தெரியாததால் முட்டாள்கள் இதனை ஆட்சேபித்துள்ளனர். ஷபாஅத் – பரிந்துரையையும் கிறித்தவ பாவ இரட்சிப்புக் கொள்கையும் ஒன்றுதான் என இவர்கள் கருதுகின்றார்கள். ஆனால் இவை ஒன்றாக முடியாது. கிறித்தவ பாவமன்னிப்புக் கொள்கையானது ஒருவர் நற்செயல்களை செய்வதிலிருந்தும் அவரை தேவையற்றவராக ஆக்கி விடுகின்றது. ஆனால், பரிந்துரை நற்செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. எந்த விஷயம் தன்னகத்தே ஒரு தத்துவம் இல்லாமல் இருக்கின்றதோ அது ஒன்றுமற்றதாகும். இஸ்லாத்தின் கொள்கைகளும், கோட்பாடுகளும், அதன் ஒவ்வொரு போதனையும் தன்னகத்தே ஒரு தத்துவத்தை வைத்திருக்கின்றது என்பது நமது வாதமாகும். அறிவுப்பூர்வமான சான்றுகள் இதற்கு துணையாக இருக்கின்றன. மற்ற மதங்களின் கொள்கைகளில் அது இல்லை.

பரிந்துரை நற்செயல்கள் செய்யத் தூண்டக்கூடியதாக இருப்பது எப்படி? இந்த கேள்விக்கான பதிலும் திருக்குர்ஆனிலிருந்து கிடைக்கின்றது. கிறித்தவ பாவமன்னிப்புக் கொள்கையின் நிறம் அதில் இல்லை எனபதை அது நிரூபிக்கின்றது. கிறித்தவ பாவ இரட்சிப்புக் கொள்கை மூலம் கவனக்குறைவும் சோம்பேறித்தனமும் உருவாகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்: *ஃபஇஸா ஸஃலக்க இபாதீ அன்னீ ஃபஇன்னீ கரீப்* – அதாவது என்னுடைய அடியார் என்னைப் பற்றி நான் எங்கு இருக்கின்றேன் என்று உம்மிடம் கேட்டால் நான் அருகில் இருக்கின்றேன் என்று கூறுவீராக. அருகில் இருப்பவர் எல்லாவற்றையும் செய்ய முடியும். தூரத்தில் இருப்பவரால் என்ன செய்ய முடியும்? நெருப்பு பற்றி எறியும் போது தூரத்தில் இருப்பவருக்கு செய்தி சென்றடைவதற்கு முன்னரே அனைத்தும் எரிந்து சாம்பலாகி விடும். எனவே, நான் அருகில் இருக்கின்றேன் என்று கூறுவீராக என்று இறைவன் கூறுகின்றான். இந்த வசனமும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான ஒரு இரகசியத்தைக் கூறியிருக்கின்றது. அது என்னவென்றால் அல்லாஹ்வின் வல்லமை, ஆற்றல் ஆகியவற்றின் மீது முழுமையான ஈமான் உருவாகிவிட்டால், அவன் எப்போதும் நமக்கு அருகில் இருக்கின்றான். அவன் ஒவ்வொரு குரலையும் கேட்கின்றான் என்ற ஈமான் இருக்க வேண்டும். பல துஆக்களும் ரத்து செய்யப்படுவதிலுள்ள இரகசியம் என்னவென்றால் துஆ செய்பவர் தனது பலவீனமான ஈமானால் அந்த துஆ ரத்தாகும்படி செய்து விடுகின்றார். எனவே, துஆவை அது ஏற்றுக்கொள்ளப்பட தகுதி உடையதாக ஆக்குவது அவசியமானதாகும். ஏனென்றால் இறைவன் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு கீழ் அந்த துஆ இல்லாமல் இருந்தால் பிறகு அந்த துஆவை எல்லா நபிமார்களும் ஒன்றுசேர்ந்து செய்தாலும் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அதனால் எவ்வித நற்பலனும் நல்விளைவும் ஏற்படாது. துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அதற்கான இறைவன் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு கீழ் அதனை கொண்டுவர வேண்டும். ஃபத்தபிஊனீ என்பது தான் நிபந்தனையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுவதுடன் திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்பவும் செயல்பட வேண்டும்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

இந்த விஷயம் சிந்திக்கத்தக்கதாகும். ஒருபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து, *உமது பிரார்த்தனை மூலம் அவர்களிடம் குளிர்ந்த தன்மை ஏற்படுகிறது* என்று அல்லாஹ் கூறுகின்றான். மன உணர்வுகளின் வேகம் தனிந்து குளிர்ந்து விடுகின்றது. மறுபுறம் *எனது கட்டளைகளுக்கு அவர்கள் செவிசாய்க்க வேண்டும்* என்று அல்லாஹ் கூறுகின்றான். இந்த இரண்டு வசனங்களையும் ஒன்றுசேர்த்துப் பார்க்கும் போது துஆ செய்பவர் துஆ செய்ய வைப்பவர் இடையிலுள்ள தொடர்பும் அந்த தொடர்பினால் ஏற்படும் நல்விளைவு பற்றியும் தெரிகிறது.

துஆ செய்பவர் மற்றும் துஆ செய்ய வைப்பவர் ஆகியோருக்கு இடையில் இருக்கும் தொடர்பு பற்றியும் தெரிய வருகிறது. பிறகு அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் தெரிய வருகிறது. அல்லாஹ்விடம் மனிதன் கேட்க வேண்டும். அவனிடத்தில் முழுமையான ஈமான் இருக்க வேண்டும். அவனது கட்டளைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்திற்காக செய்த துஆக்களுக்கு வாரிசாக மனிதன் ஆகின்றான். பிறகு அதன் விளைவுகள் தென்படும்.

ஏனென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிந்துரை மற்றும் துஆ மட்டும் போதுமானது; சுயமாக எந்த செயலையும் யாரும் செய்ய வேண்டாம் என்றும் இறைவன் கூறவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிந்துரை, துஆ ஆகியவற்றின் தேவையே இல்லை என்று கருதுவதும் வெற்றிக்கான காரணமாக இருக்க முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிரிதோரிடத்தில் கூறுகின்றார்கள்:**

எவர் தன்னை சீர்திருத்திக் கொள்வாரோ அவருக்குதான் துஆ பலனைத் தரும். அவர் இறைவனுடன் உண்மையான தொடர்பை நிலைபெறச் செய்ய வேண்டும். தூதர் எவருக்காவது பரிந்துரை செய்து எவருக்காக அவர் பரிந்துரை செய்தாரோ அந்த நபர் தன்னை சீர்திருத்திக் கொள்ளவில்லை என்றால் கவனமற்ற வாழ்க்கையிலிருந்து வெளியேறவில்லையென்றால் பிறகு அவரது அந்த பரிந்துரை அந்த நபருக்கு எந்தப் பலனையும் தராது.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

ஒவ்வொரு நபிக்கும் ஒரு குறிப்பான துஆ இருக்கின்றது. அதனை அந்த நபி கேட்கின்றார். எனக்காக உள்ள அந்த குறிப்பான துஆவை எனது உம்மத்திற்காக பரிந்துரை செய்வதற்காக கியாமத் நாள் வரை பாதுகாக்க வைக்க நான் விரும்புகின்றேன்.

அல்லாஹ் நம்மையும் கியாமத் வரையிலுள்ள நமது சந்ததிகளையும் உண்மையான முறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உம்மத்தைச் சார்ந்தவர்களாக ஆக்குவானாக. அவர்களது பரிந்துரையிலிருந்து அருள்களைப் பெறக் கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக!

பரிந்துரையுடன் தொடர்புள்ள ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சில துஆக்களை நான் உங்கள் முன் வைக்கின்றேன். அந்த துஆக்கள் ஆயினே கமாலாத்தே இஸ்லாம் என்ற அவர்களது நூலில் இடம்பெற்றுள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த கண்ணியமிக்க ரஸூல் (ஸல்) அவர்களுக்கு எங்கள் தரப்பிலிருந்தும் உனது படைப்பினங்களுக்கு நீ வழங்கக்கூடியவற்றில் சிறந்த நற்கூலியை வழங்குவாயாக. அவர்களது அணியில் இருக்கும் நிலையில் எங்களை நீ மரணிக்கச் செய்வாயாக. அவர்களது உம்மத்தைச் சார்ந்தவர்களாக இருக்கும் நிலையில் கியாமத் நாளன்று எங்களை எழுப்புவாயாக! அவர்களது நீரூற்றிலிருந்தும் எங்களுக்கு அருந்தத் தருவாயாக! இந்த நீரூற்றை எங்களுக்காக தாகம் தணிக்கக்கூடியதாக ஆக்குவாயாக! அவர்களை இவ்வுலகிலும் மறு உலகிலும் எங்களுக்காக பரிந்துரை செய்பவராகவும் ஆக்குவாயாக. அவர்களது பரிந்துரையை ஏற்றுக் கொள்வாயாக.

எங்கள் இறைவா! எங்களது இந்த துஆவை ஏற்றுக் கொள்வாயாக! இந்த அடைக்கலம் புகும் இடத்தில் எங்களுக்கும் இடமளிப்பாயாக!

**பிறகு இன்னோரிடத்தில் அவர்கள் இவ்வாறு துஆ செய்கின்றார்கள்:**

அல்லாஹ்வே! மனித இனத்திற்கு இரட்சிப்பை வழங்குகின்ற, ஏற்றுக் கொள்ளக்கூடிய பரிந்துரையை செய்யக்கூடிய இந்த பரிந்துரை செய்பவர் மீது உனது அருளையும் சாந்தியையும் இறக்குவாயாக.

இப்போது மனித இனத்திற்கு இரட்சிப்பை வழங்கக்கூடியவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மட்டுமேயாவார்கள்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு துஆ செய்கின்றார்கள்:**

என் இறைவா! எனது சமுதாயம் தொடர்பான எனது துஆவையும் எனது சகோதரர்கள் தொடர்பான எனது மன்றாடல்களையும் கேட்பாயாக! நான் காத்தமன்னபிய்யீனாகவும் பாவம் செய்தவர்களுக்காக ஏற்றுக் கொள்ளப்படுகின்ற பரிந்துரையைச் செய்பவராகவும் இருக்கின்ற உனது நபியை வஸீலாவாக – ஊடகமாக வைத்து உன்னிடம் வேண்டுகின்றேன்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான தகுதி பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இப்போது மனித இனத்திற்காக பூமியின் மேலே திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த வேத நூலும் இல்லை. இப்போது ஆதமின் சந்ததிகளுக்கு முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர எந்தத் தூதரும் பரிந்துரை செய்பவரும் இல்லை. இந்தக் கம்பீரமான தூதரிடத்தில் உண்மையான நேசத்தை வைக்க நீங்கள்

முயற்சி செய்யுங்கள். மற்றவர்களுக்கு அவர்கள் மீது எந்த சிறப்பையும் வழங்கிவிடாதீர்கள். அப்போதுதான் வானத்தில் இரட்சிப்பைப் பெற்றவர்களாக நீங்கள் எழுதப்படுவீர்கள். இரட்சிப்பு என்பது மரணமடைந்த பிறகு வெளிப்படக்கூடிய ஒன்றல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த உலகில் தனது ஒளியைக் காட்டக்கூடிய அந்த இரட்சிப்புதான் உண்மையான இரட்சிப்பு ஆகும். இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் யார்? இறைவன் உண்மையில் இருக்கின்றான் என்று உறுதியாக நம்புபவரும் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனுக்கும் எல்லா படைப்பினங்களுக்கும் இடையில் இருக்கின்ற பரிந்துரை செய்பவராவார். வானத்திற்கு கீழே அவர்களுக்கு ஈடான தகுதியுடைய எந்த தூதரும் இல்லை. திருக்குர்ஆனுக்கு ஈடான வேறு எந்த வேதமும் இல்லை என்று நம்புகின்றார்களோ அவர்கள் இரட்சிப்புக்குரியவர்கள் ஆவர். எவரும் நிரந்தரமாக உயிருடன் இருப்பதை இறைவன் விரும்பவில்லை. அவர்கள் எப்போதும் உயிருடன் இருக்கின்றார். அவர்கள் எப்போதும் உயிருடன் இருப்பதற்காக அவர்களது ஷரீஅத்தின் அருள்களையும் ஆன்மீக அருள்களையும் கியாமத் வரை இறைவன் நீடிக்கச் செய்துள்ளான். இறுதியாக அவர்களது ஆன்மீக அருள்களின் விளைவாக வாக்களிக்கப்பட்ட மஸீஹை இந்த உலகில் அனுப்பினான். இஸ்லாமிய கட்டிடம் முழுமை அடைவதற்கு அவரது வருகை அவசியமானதாகும். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டது போன்றே முஹம்மதிய தொடருக்கும் ஆன்மீக நிறத்தை தன்னகத்தே கொண்டுள்ள ஒரு மஸீஹ் தரப்படாதவரை இந்த உலகம் முடிவடையாமல் இருப்பது அவசியமானதாகும். இதையே இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம் ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் என்ற வசனம் சுட்டிக் காட்டுகின்றது.

இப்போதும் எப்போதும் உயிருடன் இருக்கக்கூடிய நபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே ஆவார்கள். பிறகு அவர்களிடமிருந்து அருள்களைப் பெற்றதன் மூலம் அல்லாஹ் எந்த மஸீஹை, மஹ்தியை அனுப்பினானோ அவருடன் இணைந்திருப்பது அவசியமானதாகும்.

உண்மையான முறையில் இந்த வலுவான தொடர்பை மேலும் மேலும் வலுவானதாக ஆக்குவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி வந்த மஸீஹையும், மஹ்தியையும் நபியுல்லாஹ் ஆகவும் இருக்கக்கூடியவரின் ஜமாஅத்தில் உறுதியாக இணைந்திருந்து நற்செயல்களைச் செய்யும் நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! எப்போதும் நாம் அவனது அருட்கொடைகளைப் பெற்றவர்களின் அணியில் இணைந்தவாறு அல்லாஹ்வின் அருள்களைப் பெற்றுக் கொண்டே செல்பவர்களாக நம்மை ஆக்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 06.05.2011**

Translated by : **Maulvi M. RAFEEQ AHMAD H.A.**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**